**பிரதித் தூதுவர் ரொபேர்ட் ஹில்டன்**
**‘இலங்கையின் ஆட்கடத்தல் தொடர்பான தகவல்களைத் திரட்டல்’ நிகழ்வில் ஆற்றிய உரை**
**ஆசிய பவுன்டேஷன்**
**கொழும்பு**
**மார்ச் 18, 2019**

**பிரதித் தூதுவர் ஹில்டன் :** அனைவருக்கும் வணக்கம், இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் சார்பில் ஆட்கடத்தல்கள் குறித்து உரையாற்ற என்னை அழைத்தமைக்காக இலங்கைக்கான பிரதிநிதி தினேஷா விக்ரமநாயக்க மற்றும் ஆசிய பவுன்டேஷனுக்கு எனது நன்றிகள். உங்கள் அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைவதுடன், ஆட்கடத்தல்களுக்கு எதிராக நீங்கள் எடுத்திருக்கும் போராட்டத்துக்கு நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

அமெரிக்க அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான பங்காண்மையுடன், சிவில் அமைப்புக்கள் மற்றும் இலபநோக்கற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் உருவான இந்த நிகழ்வில் பங்களிப்பதையிட்டு நான் பெருமையடைகிறேன். தினேஷாவுடன் இணைந்து இந்த ஆய்வறிக்கையை தயாரித்த நெல்சன் கம்பனி மற்றும் பெண்கள் ஊடக ஒன்றிணைப்பு ஆகியவற்றுக்கு தினேஷாவுடன் இணைந்து நன்றிகளைக் கூற விரும்புகின்றேன். உங்களுடைய உற்சாகமான செயற்பாடு பாராட்டத்தக்கது.

தேசிய ஆட்கடத்தலுக்கு எதிரான செயலணியின் கீழ் இவ்வாறான முயற்சிக்கு இலங்கை அரசாங்கத்தின் அமைச்சுக்களால் வழங்கப்பட்ட தலைமைத்துவம் மற்றும் ஒதுக்கப்பட்ட நேரம் என்பவற்றையும் நான் பாராட்டுகின்றேன். ஆட்கடத்தல்களை தடுக்கும் அவர்களின் முயற்சிகள் இந்தப் பிராந்தியத்துக்கு நன்மையானது. விசேடமாக, சட்டமா அதிபர் திணைக்களம், நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சு, வெளிவிவகார அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் என்பவற்றுக்கு நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

அத்துடன், இந்த ஆய்வுக்கு தமது நேரம் மற்றும் நிபுணத்துவத்தை வழங்கிய சிவில் சமூக அமைப்புக்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். இந்த அறிக்கையில் வித்தியாசமான நாற்பத்தியெட்டு சிவில் சமூக அமைப்புக்கள் பங்கெடுத்திருப்பதுடன், அவற்றில் சிலவற்றை தினேஷா கூறியதைக் கேட்டிருப்பீர்கள்.

ஜனாதிபதி ட்ரம்ப் தனது நிர்வாகத்தில் ஆட்கடத்தல் விவகாரத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதை அடையாளம் கண்டிருப்பதுடன், இதனை அமெரிக்காவில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியில் ஆட்கடத்தல்கள் தடுக்கப்பட வேண்டும் என்பதில் அர்ப்பணிப்புடன் உள்ளார். ஆட்கடத்தலை எதிர்த்துப் போராடுவது விரிவான மற்றும் பலவிடயங்களை ஒன்றிணைத்த ஒரு அணுகுமுறையாகும். அதாவது அனைத்து முகவரமைப்புக்களையும் பரந்துபட்ட பொறுப்புணர்வுடன் செயற்படச் செய்வதற்கு அரசாங்கம் முழுமையான பங்களிப்பை மேற்கொள்ளவேண்டியிருக்கும்.

ஆமெரிக்காவில் ஜனாதிபதியின் இடைத்தொடர்பு செயலணி ஆட்கடத்தல்களை கண்காணிப்பது மற்றும் அதற்கெதிரான போராட்டத்தை முன்னெடுத்துள்ளது. இதற்கு மேலதிகமாக ஆட்கடத்தல்களிலிருந்து தப்பியவர்களிடமிருந்து ஆட்கடத்தல் தொடர்பான அமெரிக்க ஆலோசனைக் குழுவுக்குக் கிடைக்கும் தகவல்களை அடிப்படையாக் கொண்டு மத்திய அரசாங்கம் முன்னுரிமைப் பட்டியலைக் கொண்டுள்ளது. இந்தக் குழுவானது தப்பியவர்களைக் கண்டுபிடித்து ஆலோசனை வழங்குவதற்கும், ஜனாதிபதியின்

இடைத்தொடர்பு செயலணிக்கு ஆட்கடத்தலுக்கு எதிரான கொள்கைகளுக்கான பரிந்துரைகளையும் முன்வைப்பதற்கும் தளமாக அமைந்துள்ளது.

இலங்கையில் ஆட்கடத்தல்களுக்கு எதிரான முயற்சிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளது. தற்பொழுது, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மொத்தமாக 3.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியில் நான்கு நிதியுதவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது. ஆட்கடத்தல் சம்பவங்களுக்கான தண்டனைகளைப் பெற்றுக் கொடுப்பது மற்றும் நீதி விசாரணைகளைப் பலப்படுத்துவது, ஆட்கடத்தல் தொடர்பான தகவல்களைத் திரட்டல் மற்றும் அவற்றை முறையிடுவதற்கான பொறிமுறையை உருவாக்குதல், ஆட்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பது போன்றவற்றுக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இன்றையதினம் சமூகமளித்துள்ள அர்ப்பணிப்புடனான அமைப்புக்களின் இவ்வாறான முயற்சிகளுக்கு உதவியளிப்பதையிட்டு அமெரிக்க அரசாங்கம் பெருமையடைகிறது.

ஆட்கடத்தல்களுக்கு எதிரான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் அதனை முறையிடல் பொறிமுறையொன்றை அமைப்பதற்கு முன்னுரிமையளிக்க வேண்டும் என்ற இலங்கை அரசாங்கத்தின் யோசனைக்கு அமையவே இலங்கையில் ஆட்கடத்தல் தொடர்பான தரவுகளை அடையாளம் காணும் திட்டம் அமைந்துள்ளது.

இத்திட்டம் மூன்று முக்கியமான வெளிப்படுத்தல்களைக் கொண்டுள்ளது.

முதலாவதாக, ஆட்கடத்தல் தொடர்பான தகவல் சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல் முறையில் பல்துறைசார் பங்களிப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக இந்தப் புதிய ஆட்கடத்தல் தகவல் மற்றும் அறிக்கையிடல் முறையில் சம்பந்தப்பட்ட பங்கான்மை அமைப்புக்கள் பங்களிக்கச் செய்வதற்கான திறமையை கட்டியெழுப்புவதாகும்.

இறுதியாக, இந்த முறையினால் கிடைக்கும் முடிவுகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குப் பரப்புவதாகும்.

இதன் வெளிப்பாடுகள் மிகவும் முக்கியமானவை என்பதுடன், அவற்றை நாம் அங்கீகரிப்பது நன்மையாக அமையும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆட்கடத்தல் சம்பவங்களை இலங்கை அரசாங்கம் தேசிய மட்டத்தில் அடையாளம் கண்டு, ஆராய்ந்து, விரைவில் அவற்றை தடுப்பதற்கு ஆசிய பவுன்டேஷனும் அதன் பங்குதாரர்களும் முதல்தடவையாக வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன.

மேலதிகமாக இந்த அறிக்கையில் சேகரிக்கப்பட்டுள்ள தகவல்கள் அரசாங்க நிறுவனங்கள் ஆட்கடத்தல்களால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கும், ஆட்கடத்தல் தொடர்பில் விரிவான பார்வையொன்றைப் பெற்று அதற்கு எதிராகப் போராடுவதற்கும் பேரும் உதவியாகவிருக்கும்.

இறுதியாக, இந்த அறிக்கையில் ஆட்கடத்தல்களால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல், அவர்களுக்காக உதவி மற்றும் கண்காணிப்பு என்பவற்றுக்கு முன்னுரிமையளிப்பது மற்றும் அவர்களுக்கான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதில் அரசாங்கம் மற்றும் அதன் பங்குதாரர்களுக்கு முக்கிய பங்கு உள்ளது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீங்கள் அரசாங்கத்தில் பணியாற்றியிருந்தாலும் அல்லது சிவில் அமைப்புக்களில் பணியாற்றியிருந்தாலும் இந்த அறிக்கையை பூர்த்தி செய்வதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் எடுத்த முயற்சிகளை அமெரிக்கத் தூதரகம் சார்பில் நான் பாராட்டுகின்றேன். உங்களுடைய இந்த

முக்கிய முயற்சியானது ஆட்கடத்தல்களால் ஏற்படும் பாதிப்பு மற்றும் அவற்றினால் பாதிக்கப்படும் மக்களுக்கு வழங்கப்படும் ஒரு நம்பிக்கை ஒளியாக அமைகிறது.

நன்றி.